பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
28 12 2024 **SATURDAY** 12 40 **PM**
வணக்கம். ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கின் இறுதிச்சடங்கு முழு அரசு மரியாதையுடன் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

2. நிலக்கரி உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. சென்னை அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கினை விசாரிப்பதற்கென மகளிர் காவல்துறை அதிகாரிகள் அடங்கிய சிறப்பு புலனாய்வுக் குழுவை சென்னை உயர்நீதிமன்றம் ஏற்படுத்தியுள்ளது.

4. தேசிய சிறார் விருது தமக்கு வழங்கப்பட்டிருப்பது பெருமை அளிப்பதாக உள்ளது என்று தமிழகத்தைச் சேர்ந்த ஜனனி நாராயணன் கூறியுள்ளார்.

5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் நிதிஷ்குமார் ரெட்டி சதம் அடித்தார்.

>>>>>><<<<<<

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கின் இறுதிச்சடங்கு முழு அரசு மரியாதையுடன் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

இன்று காலை பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது உடல், **Nigambodh ghat** பகுதிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

இதன் பின்னர், இறுதிச் சடங்குகள் முழு அரசு மரியாதையுடன் நடைபெற்றன.

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக்குழு தலைவர் திருமதி. சோனியா காந்தி,

மத்திய அமைச்சர்கள், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் உட்பட பலர் மன்மோகன் சிங்கின் உடலுக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

பூட்டான் அரசர் **Jigme Khesar Namgyel Wangchuck** மற்றும் மொரீசியஸ் வெளியுறவு அமைச்சர் திரு. **Maneesh Gobin** உள்ளிட்டோரும் மன்மோகன் சிங்கிற்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, துப்பாக்கி குண்டுகள் முழங்க அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.

(சவுண்ட் பைட் - குண்டுகள் 26 செகண்ட்ஸ்)

**>>>>>><<<<<<**

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்-கிற்கு உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு. சுதான்சு திரிவேதி கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட மன்மோகன் சிங்கிற்கு நினைவகம் அமைப்பதற்கு மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்த விவரங்கள் காங்கிரஸ் கட்சியிடமும் தெரிவிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இவ்விவகாரத்தை திட்டமிட்டு காங்கிரஸ் அரசியலாக்குவதாகவும் திரு. சுதான்சு திரிவேதி குற்றம் சாட்டினார்.

**>>>>>><<<<<<**

நிலக்கரி உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த நிதியாண்டில் நிலக்கரி உற்பத்தி 997 மில்லியன் டன் அளவிற்கு அதிகரித்துள்ளதாக சுரங்கத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இது, அதற்கு முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், 11 புள்ளி ஏழு ஒன்று சதவீதம் அதிகம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் கடந்த மாதம் 15ஆம் தேதிவரை 963 மில்லியன் டன் நிலக்கரி விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், வடகிழக்கு மாநிலங்களில் வன்முறைச் சம்பவங்கள் வெகுவாக குறைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

அமைதியை நிலைநிறுத்துவதற்காக 12க்கும் மேற்பட்ட ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**Bodo** அமைதி ஒப்பந்தமும் இதில் அடங்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தங்கள், வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்துள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

சென்னை, அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கினை விசாரிப்பதற்கென காவல்துறையை சேர்ந்த மகளிர் அதிகாரிகள் அடங்கிய சிறப்பு புலனாய்வுக் குழுவை சென்னை உயர்நீதிமன்றம் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வழக்கினை சிபிஐ விசாரணைக்கு மாற்ற உத்தரவிடக் கோரி தாக்கல் செய்த மனுக்களை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. எஸ்.எம். சுப்பிரமணியம், திரு. லக்ஷ்மி நாராயணன் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

அண்ணாநகர் துணை ஆணையர் சிநேகப்பிரியா, ஆவடி துணை ஆணையர் ஜமான் ஜமால், சேலம் துணை ஆணையர் பிருந்தா ஆகியோர் அடங்கிய குழு இந்த விசாரணையை மேற்கொள்ளும் என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்திற்கு 25 லட்சம் ரூபாய் இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்விக் கட்டணம் உட்பட எவ்வித கட்டணமும் வசூலிக்காமல், சம்பந்தப்பட்ட மாணவி படிப்பை தொடர்ந்து முடிக்க அனுமதிக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் பாதுகாப்பை மேம்படுத்த வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

விசாரணை ஆரம்ப கட்டத்தில் உள்ள நிலையில், செய்தியாளர் சந்திப்பை நடத்தி முக்கிய தகவல்களை பகிர்ந்தது குறித்து, சென்னை காவல்துறை ஆணையருக்கு எதிராக தேவைப்பட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறும் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையே, அண்ணா பல்கலைக் கழகத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தமிழக ஆளுநர் திரு. ஆர். என். ரவி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<<

இந்தியா – நேபாளம் இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்திய ராணுவத்தினர் இன்று நேபாளம் புறப்பட்டுச் சென்றனர்.

இந்த கூட்டு ராணுவப் பயிற்சி வரும் செவ்வாய்க்கிழமை தொடங்கி, அடுத்த மாதம் 13ஆம் தேதிவரை நடைபெறும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த கூட்டு ராணுவப் பயிற்சியில் பேரிடர் மீட்பு, வனப்பகுதி போர் பயிற்சி போன்றவை இடம்பெறும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>>><<<<<<

தேமுதிக தலைவர் விஜயகாந்தின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இதனையொட்டி, சென்னையில் அக்கட்சியினர் பங்கேற்ற அமைதிப் பேரணி நடைபெற்றது.

இந்நாளையொட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், தமிழ்த் திரைப்படங்களில் தனித்திறமையுடன் முத்திரை பதித்த விஜயகாந்த், அரசியலிலும் தவிர்க்க இயலாத ஆளுமையாக விளங்கியதாக புகழாரம் சூட்டியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள செய்தியில், மாசற்ற மனதிற்கும், தூயஅன்பிற்கும் சொந்தக்காரதரராக விளங்கிய விஜயகாந்த், மண்ணைவிட்டு மறைந்தாலும் நமது நெஞ்சங்களில் வாழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி விடுத்துள்ள செய்தியில், உயரிய மனிதநேய பண்புகளாலும், ஈகை பெருங்குணத்தாலும் தமிழக மக்களின் பேரன்பை பெற்றவர் விஜயகாந்த் என்று கூறியுள்ள அவர், பொதுவாழ்வில் அவர் படைத் சாதனைகளை இந்நாளில் நினைவு கூருவதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

தேசிய சிறார் விருது தமக்கு வழங்கப்பட்டிருப்பது பெருமை அளிப்பதாக உள்ளது என்று தமிழகத்தைச் சேர்ந்த ஜனனி நாராயணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், இந்த விருது தமக்கு கூடுதல் பொறுப்பினை ஏற்படுத்தியுள்ளதாக கூறினார்.

(சவுண்ட் பைட் - ஜனனி நாராயணன்-1 60 செகண்ட்ஸ்)

இந்த விருது தமக்கு ஊக்கத்தை அளித்துள்ளதாகவும் ஜனனி நாராயணன் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ஜனனி நாராயணன்-2 30 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

பஞ்சாப் மாநிலத்தில் நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்த 8 பேரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள பிரதமர், இந்த விபத்து தமக்கு மிகுந்த மனவேதனையை அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் நிதிஷ்குமார் ரெட்டி சதம் அடித்தார்.

மெல்போர்னில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மூன்றாம் நாளான இன்று, ஐந்து விக்கெட் இழப்பிற்கு 164 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்ஸை ஆடிவரும் இந்தியா ஆட்ட நேர இறுதயில் 9 விக்கெட் இழப்புக்கு 358 ரன் எடுத்துள்ளது.

நிதிஷ்குமார் ரெட்டி அபாரமாக ஆடி 105 ரன்னுடனும், முஹமது சிராஜ் 2 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

>>>>>><<<<<<

உலக **Rapid Chess** சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அர்ஜூன் எரிகேஸி ஆடவர் பிரிவிலும், **Harika Dronavalli** மற்றும் **Koneru Humpy** மகளிர் பிரிவிலும் முதலிடத்தில் உள்ளனர்.

நியூயார்க்கில் நடைபெற்று வரும் இப்போட்டியில் அர்ஜூன் எரிகேஸி ஏழு புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

**Harika Dronavalli** மற்றும் **Koneru Humpy** தலா ஆறரை புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளனர்.

>>>>>><<<<<<

அஹமதாபாத் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Vaishnavi Adkar** பட்டம் வென்றார்.

>>>>>><<<<<<

ஹாக்கி இந்தியா லீக் போட்டி இன்று ரூர்கேலாவில் தொடங்குகிறது.

>>>>>>END<<<<<<